பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:22 | 01.12.2023 வெள்ளிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# போதகர் ஜெரோம் பெர்னாண்டோ கைது

சர்ச்சைக்குரிய ஞாயிற்றுக்கிழமை பிரசங்கம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இரண்டாவது நாளாக இன்று காலை குற்றப் புலனாய்வுப் பிரிவிற்குச் சென்ற ஜெரோம் பெர்னாண்டோ குற்றப் புலனாய்வுப் பிரிவினரால்கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த ஆண்டு மே மாதம் நிரம்பியிருந்த சபைக்கு முன்னால், புத்தர், இஸ்லாம், இந்து மதம் குறித்து அவதூறான கருத்துக்களை வெளியிட்டதாகக் கூறப்படும் சர்ச்சைக்குரிய இலங்கை போதகர், இலங்கை காவல்துறையால் தேடப்பட்டு வந்தார். அவரது கருத்துகளின் வீடியோ காட்சிகள் நாட்டில் உள்ள பௌத்த மதத்தை பின்பற்றுபவர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. சலசலப்பைத் தொடர்ந்து, ஜெரோம் பெர்னாண்டோ தனது சர்ச்சைக்குரிய கருத்துக்கு மன்னிப்பு கேட்டார்.

ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக கடந்த மே மாதம் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பயணத்தடையை பெற்றுக்கொண்ட போதிலும் அதற்குள் அவர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தமை தெரியவந்துள்ளது.

கடந்த மே மாதம் அவர் வெளிநாடு சென்றதைத் தொடர்ந்து, ஜெரோம் பெர்னாண்டோ நேற்று இலங்கை திரும்பினார்.



அவரைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவைக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சிஐடி அவரைக் கைது செய்வது 48 மணித்தியாலங்களுக்குள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்கு மூலமொன்றை வழங்கு மாறு ஆயர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து அவர் நேற்று 08 மணிநேர வாக்குமூலத்தை வழங்கினார். இன்று வாக்குமூலம் வழங்கச் சென்றபோது கைது செய்யப்பட்டார். 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளது.

# க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த தரம் 8 மாணவி

கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் தரம் 8 இல் கல்வி பயிலும் மாணவி ஒருவர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்று சாதனை படைத்துள்ளார்.

மாணவியின் பெற்றோர் இருவரும் ஆசிரியர்கள். சில சிக்கல் நிலைகள் காரணமாக வீட்டில் இருந்து சுயகற்றல் மூலம் மாணவி பரீட்சைக்குத் தோற்றியதாக மாணவியின் தாயார் தெரிவித்தார்.

மாணவி சதுரங்க போட்டிகளில் சிறந்த திறமையை வெளிப்படுத்தக் கூடியவர் என்றும், ஆறு நாடுகளுக்குச் சென்று போட்டிகளில் பங்கேற்றுள்ளதாகவும் பல துறைகளில் தான் தடம் பதிக்க வேண்டும் எனவும் முடியுமென்றால் அடுத்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பத்திற்காக மாணவி காத்திருப்பதாகவும் அவரது தாயார் தெரிவித்தார்.




# முதலிடத்தில் கண்டி மாணவி

கண்டி மகாமாயா மகளிர் கல்லூரி மாணவி ஒருவர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தரவரிசையில் முதலிடம் பெற்றுள்ளார், இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி ஒருவர் பெற்றுள்ளதாக, கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஒருவர் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த நான்காம் இடத்தைப் பெற்ற இரு மாணவர்களும் கம்பஹா ஹோலி கிராஸ் கல்லூரியைச் சேர்ந்த மற்றுமொரு மாணவர்களும் இந்த சாதனையைப் படைத்துள்ளனர். 13,588 மாணவர்கள் ஒன்பது பாடங்களில் ஏ சித்தி பெற்றுள்ளனர் என்றார்.

# கைலாசாவுடன் ஒப்பந்தம் செய்த பராகுவே அமைச்சரின் பதவி பறிப்பு

நித்தியானந்தாவின் 'கைலாசா' கற்பனை தேசத்துடன் ஒப்பந்தம் செய்த பராகுவே வேளாண்துறை அமைச்சர் அர்னால்டோ சாமோராவின் பதவி பறிக்கப்பட்டு உள்ளது.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா சபை கூட்டத்தில் நித்தியானந்தாவின் சிஷ்யைகள் சிலர் பங்கேற்று பரபரப்பை ஏற்படுத்தினர். அப்போது அமெரிக்காவின் 30 நகரங்கள், பிரான்ஸ், கினீ நாடுகளின் நகரங்களுடன் 'சிஸ்டர் சிட்டி' ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கைலாசாவின் இணையதளத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்த விவகாரம் பராகுவேவின் முன்னணி ஊடகங்களில் வெளியாகி கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. பராகுவே பாராளுமன்றத்திலும் கைலாசா விவகாரம் எழுப்பப்பட்டது. இது தொடர்பாக பராகுவே அரசு விசாரணை நடத்தியதில் கற்பனை தேசத்துடன் வேளாண்துறை ஒப்பந்தம் செய்திருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து வேளாண் அமைச்சர் அர்னால்டோ சாமோரா நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டார்.



# போப்பாண்டவரின் துபாய் பயணம் இரத்து



போப்பாண்டவர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருப்பதால் துபாயில் நடைபெறும் ஐ.நா அவையின் உலக காலநிலை மாநாட்டில் அவர் கலந்து கொள்ளமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போப் பிரான்சிஸூக்கு, இளம் வயதிலேயே அவருடைய நுரையீரலின் ஒரு பகுதி அகற்றப்பட்டது.

இந்தநிலையில், கடந்த ஒருவாரமாக அவர் நுரையீரல் வீக்கம் மற்றும் காய்ச்சலால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக வத்திகான் அரண்மனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# இம்ரான்கான் போட்டியிட மாட்டார்

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் இம்ரான்கான் உள்கட்சித் தேர்தலில் போட்டியிட மாட்டார் என்றும், அதற்குப் பதிலாக பாரிஸ்டர் கோஹர்கானை பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் தலைவர் பதவிக்கு, வரவிருக்கும் பொதுத் தேர்தலில் கட்சியை வழிநடத்திச் செல்வதற்காக பரிந்துரை செய்துள்ளதாக உயர்மட்டத் தலைவர் ஒருவர் புதன்கிழமை தெரிவித்தார்.

பாரிஸ்டர் அலி ஜாபர், தலைவர் இம்ரான்கான் டிசம்பர் 2 ஆம் திகதி நடைபெற உள்ள உள்கட்சித் தேர்தலில் போட்டியிட மாட்டார் என்றும், கட்சியின் தலைவர் பதவிக்கு பாரிஸ்டர் கோஹர்கான் பரிந்துரைக்கப்பட்டதாகவும் டான் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

# ஊழல் வழக்கிலிருந்து நவாஸ் ஷெரீப் விடுதலை



அவென்ஃபீல்ட் எனும் ஊழல் வழக்கிலிருந்து பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபை இஸ்லாபாத் உயர்நீதிமன்றம் விடுவித்தது. இந்தத் தீர்ப்பை அமீர் ஃபரூக், மியான்குல் ஹஸன் ஔரங்கசீப் நீதிபதிகள் அடங்கிய அமர்வு வழங்கியுள்ளது.

பாகிஸ்தானின் 12 ஆவது, 14 ஆவது மற்றும் 20 ஆவது பிரதமராகப் பதவி வகித்து வந்த நவாஸ் ஷெரீப் (73), பனாமா ஆவணமுறைகேடு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தால் கடந்த 2017 ஆம் ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

பாகிஸ்தானில் விரைவில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மெக்சிக்கோவில் ஐந்து பத்திரிகையாளர்கள் கொலை

ஒரேநாளில் ஐந்து மெக்சிக்கோ பத்திரிகையாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

செவ்வாயன்று நடந்த தாக்குதல்களில் ஒன்று, குற்றம் நடந்த இடத்தில் இருந்து திரும்பிய நான்கு புகைப்பட பத்திரிகையாளர்கள் தெற்கு குரேரோ மாநிலத்திலுள்ள ஒரு இராணுவ முகாம் அருகே சுட்டுக் கொல்லப்பட்டனர்.



சில மணிநேரங்களுக்குப் பிறகு, நிருபர் மேனர் ரமோன் ரமிரெஸ் மற்றும் ஒரு துணை அண்டை மாநிலமான மைக்கோகானில் சுட்டுக் கொல்லப்பட்டனர். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக அந்நாட்டு பத்திரிகைகளுக்கு எதிரான வன்முறை நடைபெறுகிறது.

# ஒருபாலினத் திருமணத்துக்கு நேபாளம் அங்கீகாரம்

ஒரே பாலின திருமணத்தை அதிகாரபூர்வமாக பதிவு செய்த முதல் தெற்காசிய நாடு நேபாளம்.

உச்சநீதிமன்றம் அதை சட்டபூர்வமாக்கிய ஐந்து மாதங்களுக்குப் பிறகு, நேபாளம் புதன்கிழமை முறைப்



படி ஒரே பாலின திருமணத்தின் முதல் திருமணத்தை நடத்தியது.

மேற்கு நேபாளத்தில் உள்ள லாம்ஜங் மாவட்டத்தின் டோர்டி கிராமப்புற நகராட்சியில் திருமணம் பதிவு செய்யப்பட்டது என்று ப்ளூ டயமண்ட் சொசைட்டியின் தலைவர் சஞ்சிப் குருங் (பிங்கி) தெரிவித்தார்.

2007 ஆம் ஆண்டு நேபாள உச்ச நீதிமன்றம் ஓரினச்சேர்க்கை திருமணத்தை அனுமதித்தது. 2015 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேபாள அரசியலமைப்புகூட, பாலியல் நோக்குநிலையின் அடிப்படையில் பாகுபாடு இருக்க முடியாது என்று வெளிப்படையாகக் கூறுகிறது.

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

## எய்ட்ஸ் இல்லாத இலங்கை

**2025 ஆம் ஆண்டளவில், இலங்கையில் எய்ட்ஸ் நோயை இல்லாதொழிப்பதற்கான முயற்சியில் சுகாதார அமைச்சு இறங்கி உள்ளது. ஆனால், எய்ட்ஸ் நோய் தொடர்பான தரவுகள் நேர் எதிராக உள்ளன.**

**இந்த ஆண்டு செப்ரெம்பர் மாத இறுதிக்குள் இலங்கையில் எய்ட்ஸ் நோயாளிகள் தொகை அதிகரித்துள்ளது. 2022 இல் 427 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். 2022 ஆம் ஆண்டின் தொடர்புடைய காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 13 சதவிகித அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. செப்ரெம்பர் வரை 72 ஆண்களும் ஏழு பெண்களும் 15-4 வயதுக்கு உட்பட்டவர்களும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களும் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2023 இல் பதிவாகியுள்ள எச்.ஐ.வி நோயாளிகளின் விகிதம் 8.7:1 ஆக உள்ளது. இந்த வருடம் இதுவரை எச்.ஐ.வி:எய்ட்ஸ் நோயால் 43 பேர் மரணமானார்கள். இதேவேளை, இலங்கையில் உத்தியோகபூர்வமாக திருநங்கைகள் மத்தியில் 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2009 முதல் இதுவரை மொத்தம் 4,095 ஆண்களும் 1,391 பெண்களும் எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

**இலங்கையில் எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன குறிப்பிட்டார்.**

**கடந்த வருடம் 600 எய்ட்ஸ் நோயாளர்கள் பதிவாகி இருந்த நிலையில் தற்போது நாட்டில் 6000 நோயாளர்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.**

**ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதியில் பதிவான எய்ட்ஸ் நோயாளிகளில் பாடசாலை மாணவர்கள் உட்பட 15-4 வயதுக்குட்பட்டவர்கள் கணிசமான அளவு உள்ளதாக தெரியவந்துள்ளது. எயிட்ஸ் மற்றும் பாலுறவுத் திட்டத்தின்படி, இவ்வருடம் ஒக்ரோபர் மாதம் வரையான காலப்பகுதியில் 485 புதிய எய்ட்ஸ் நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். இந்நிலை தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என எயிட்ஸ் திட்டத்தின் பணிப்பாளர் ஜானகி விதான பத்திரன தெரிவித்துள்ளார். 2025 ஆம் ஆண்டளவில் 95 வீதமான எய்ட்ஸ் தொற்று உள்ளவர்களைக் கண்டறிய வேண்டிய நிலையில் 2022 ஆம் ஆண்டளவில் 86 வீதமானவர்களைக் கண்டறிய முடிந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

**இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,**

**“எய்ட்ஸ் நோய் தொற்றாளர் ஒருவருக்கு இது வரை பயன்படுத்தப்பட்டு வந்த பல வகையான மருந்துகளுக்கு பதிலாக, தற்போது ஒரே மருந்தில் அந்த வகைகளைச் சேர்க்கும் வகையில் ஒரு மருந்து உருவாக்கப்பட்டுள்ளதால், நோயாளிகளுக்கு பயன்படுத்த மிகவும் எளிதாக உள்ளது. வைத்தியரின் பரிந்துரைகளின் அடிப்படையில் தினசரி மருந்தை உட்கொள்ள வேண்டும். அவ்வாறு செயல்படின், இந்த எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 0.001 என்ற இலக்கை எட்டலாம்.**

**கடந்த 1988 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் முதல் நாள், எச்.ஐ.வி (மனித நோயெதிர்ப்பு குறைபாடு வைரஸ்கள்) மற்றும் அதனால் ஏற்படும் எய்ட்ஸ்க்கு (நோயை எதிர்க்கும் சக்தியில்லாமல் போய்விடுவது) எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்த, உலக எய்ட்ஸ் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.**

**மருத்துவ சிகிச்சை வழங்கப்படாத எச்.ஐ.வி வைரஸ், உயிருக்கே ஆபத்தான எயிட்ஸ் ஆக மாறும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நோய் குறித்த பல்வேறு மூடநம்பிக்கைகளும், பொய்யான தகவல்களும் இன்னும் பரப்பப்பட்டு வருகின்றன. இந்தத் தொகுப்பில், எய்ட்ஸ் மற்றும் எச்.ஐ.வி குறித்து பரவலாக நம்பப்படும் மூடநம்பிக்கைகளும், அதற்கு பின்னால் உள்ள அறிவியலையும் பார்க்கலாம். சமூகச் சீரழிவும் முறையற்ற தொடர்புகளும் இல்லை என்றால் எய்ட்ஸ்ும் இல்லை. எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு மூலமே அதனை இல்லாதொழிக்கலாம்.**

## இலங்கையில் அதிக யானை மரணங்கள் பதிவாகியுள்ளன

இலங்கையில் யானைகள் - மனித மோதல்கள் காரணமாக ஒவ்வொரு வருடமும் அதிக யானைகள் உயிரிழப்பதாக, துறைசார் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. நவம்பர் 24 ஆம் திகதி அஜித் மான்னப்பெரும தலைமையில் நடைபெற்ற சுற்றுச் சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டுவரப்பட்டது.

அதன்படி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சுற்றாடல் சட்டப் பிரிவின் அழைப்பாளர் சரக ஜயரத்ன உள்ளிட்ட குழுவினர், குழுவிற்கு முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

சட்டத்தில் காட்டு யானைகள் தொடர்பான சில முக்கிய பிரிவுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது, அங்கு பிரிவு 3, பிரிவு 6, பிரிவு 19, பிரிவு 20 மற்றும் பிரிவு 30 ஆகியவற்றின் திருத்தம் குறித்து விவாதிக்கப்பட்டது. வன விலங்குகளை கொல்வதற்காக விதிக்கப்படும் அபராதக் கட்டணத்தை திருத்தியமைக்க வேண்டும் என்றும், காட்டு யானைகளை பொதுச் சொத்தாக மாற்றுவதன் மூலம் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்குவதற்குத் தேவையான சட்டக் கட்டமைப்பைத் தயாரிக்கவும் முன்மொழியப்பட்டது. அத்துடன், இந்த நாட்டில் காட்டு யானைகள் அடிக்கடி உயிரிழக்கும் சம்பவங்களில் ஒன்றாக சட்டவிரோத உயர் அழுத்த மின்கம்பிகள் பொருத்தப்படுவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பாக விலங்குகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு சட்டத்திற்கு தெளிவான விளக்கம் இல்லாததால், தெளிவான விளக்கம் மற்றும் அது தொடர்பான தண்டனைகள் உள்ளிட்ட புதிய ஷரத்துகளை அறிமுகப்படுத்துவது குறித்து குழுவில் விவாதம் நடந்தது. அதன்படி, குழுவில் விவாதிக்கப்பட்ட சட்டத் திருத்தம் தொடர்பான தற்போதைய முன்மொழிவுகளை மீண்டும் பதிவு செய்யவும் வனவிலங்கு திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்ட குழு மூலம் தொடர்புடைய பரிந்துரைகளில் உடன்பாட்டை எட்டவும் குறிப்பிட்ட காலக்கெடுவின் கீழ் சட்டத் திருத்தத்தை இறுதி செய்யவும் குழுபரிந்துரைத்தது.

## திருமறைக் கலாமன்றத் தின நிகழ்ச்சிகள்

கலைப்பணியில் 58 ஆண்டுகளை நிறைவு செய்து 59 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் திருமறைக் கலாமன்றத்தின் தினம் நாளை மறுதினம் (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை சிறப்பிக்கப்படுவதை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

காலை 7.00 மணிக்கு இல.17,மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலை ஞானசுரபி தியான இல்லத்தில் நன்றி வழிபாடு இடம்பெறும். தொடர்ந்து மு.ப.10.00 மணிக்கு இல. 238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் மன்ற அலுவலகம் அருகில் அமைந்துள்ள கலைத்தூது மணிமண்டபத்தில் இரத்ததான முகாம் நடைபெறும்.

கலை நிகழ்ச்சிகள் மாலை 4.00 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில்நடைபெறும். யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய உதவிப் பணிப்பாளர் கி.கந்தவேள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனங்கள், அண்மையில் திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்பட்ட யாழ்ப்பாண தென்மோடி கூத்து மரபு ஓராள் ஆற்றுகைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு, கலைஞர் கௌரவிப்பு என்பனவும் சிறப்பு நிகழ்ச்சியாக திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் ‘நொண்டி நாடகம்’ தென்மோடி நாட்டுக்கூத்தும் இடம்பெறவுள்ளது.

## சாதாரண தரப் பரீட்சையின் 52 விடைத்தாள்கள் குப்பைக் குவியலில்

இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தர சாதாரண தரப் பரீட்சையின் 52 விடைத்தாள்கள் குப்பைக் குவியலில் இருந்து பரீட்சை திணைக்கள அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்த விடைத்தாள்கள் ஒரு பேப்பர் பார்சலில் போடப்பட்டு, விடைத்தாள்கள் மதிப்பீட்டின் முடிவில் தூக்கி எறியப்பட்டு குப்பையாக வீசப்படுவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

மேலும், பரீட்சை மீதான பொதுமக்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும் இந்த சம்பவத்தில் தொடர்பு




டைய அனைத்து அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

பரீட்சை திணைக்களம் வெளிப்படையான விசாரணையை மேற்கொள்ள வேண்டும் எனவும் இவ்வாறான சம்பவங்களை தவறு எனக் கருதி நிராகரிக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த விடைத்தாள்கள் தூக்கி எறியப்பட்டதே சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளின் தாமதத்திற்கு காரணம் என்றும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். கல்வித்துறையில் அதிகாரிகளின் அலட்சியம் மற்றும் கவனக்குறைவால் பல நெருக்கடிகள் உருவாகி உள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் தொடர்ந்து இவ்விடயங்களை சுட்டிக்காட்டியும் அதிகாரிகளிடம் இருந்து நல்ல பதில் கிடைக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

# ஜப்பானில் தொழில் வாய்ப்பு

இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு ஜப்பானில் நிர்மாணத்துறையில் தொழில் வாய்ப்புகள் கிடைத்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். ஜப்பானிய மொழி புலமை, நிர்மாணத்துறை பரீட்சையில்சித்தியடைந்து இந்த தொழில்வாய்ப்புகளை பெற முடியும். இது தொடர்பான முதற்கட்ட பரீட்சை நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பமாக உள்ளன. 4 பரீட்சை மத்திய நிலையங்களில் குறித்த பரீட்சைகள் இடம்பெறவுள்ளன. 4 பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இந்த பரீட்சையில் தோற்ற முடியும் என அமைச்சர் தெரிவித்தார்.

# பஸ் கட்டணத்தில் மாற்றம் இல்லை

பஸ் கட்டணத்தில் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்ட நிலையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

# சிகிரியாவின் சூரிய உதயத்தால் $3,000 வருமானம்



சிகிரியாவில் சூரிய உதயத்தைப் பார்ப்பதன் மூலம் நாளொன்றுக்கு மூவாயிரம் டொலர்களுக்கு மேல் வருமானம் கிடைப்பதாக மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் கடனில் சுமையாக இருந்த மத்திய கலாசார நிதியத்தின் டொலர் 614% அதிகரித்துள்ளதாகவும் சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம் மூவாயிரத்துக்கும் அதிகமான அமெரிக்க டொலர்கள் ஈட்டப்படுவதாகவும் நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க தெரிவித்தார். சிகிரியாவில் சூரிய உதயத்தின் அழகைக் காண வெளிநாட்டவர்களுக்கு பாராளுமன்றத்தில் கூடிய சமய விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுக்கூட்டத்தின் போது, சிகிரியாவைச் சுற்றியுள்ள சுற்றுலாப் பயணிகளை மேலும் கவரக்கூடிய துறைகள் கண்டறியப்பட்டு வருவதாகவும் கொய்கா 8 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்க ஒப்புக்கொண்டுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். இந்த செயல்பாடுகளை மேலும் வெற்றியடையச் செய்யுங்கள்.

# மோசடிக்காரர்கள் உள்ளே
## வெளிக்கொணர்ந்தவர் வெளியே சஜித்

மனித இம்யூனோகுளோபுலின் தரமற்ற நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்து குறித்து சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் புற்று நோயாளர்களுக்கு வழங்கப்படும் ரிடோக்சினன் என்ற நோய் எதிர்ப்பு தடுப்பூசியில் இருந்தும் 11 கோடி ரூபா திருடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதாகவும் இவ்வாறான களவு, மோசடிகள் இடம்பெற்ற சுகாதார அமைச்சின் அப்போதைய அமைச்சரை பாதுகாக்க வேறு அமைச்சு வழங்கப்பட்ட போதும், திருட்டுக்களை வெளிக்கொணர்ந்த ரொஷான் ரணசிங்க வீட்டிற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (30) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

# எரிபொருள் விலைகளில் மாற்றம்

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விலை திருத்தத்திற்கு அமைய லங்கா ஐ.ஓ.சி மற்றும் சினோபெக் நிறுவனங்கள் தமது எரிபொருட்களின் விலைகளில் திருத்தத்தை மேற்கொள்ள தீர்மானித்துள்ளன. ஒக்டேன் 92 ரக பெற்றோல் 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 346 ரூபாவாகும். ஒக்டேன் 95 ரக பெற்றோல் 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 426 ரூபாவாகும்.ஒடோ டீசல் 27 ரூபாவால் குறைவடைந்துள்ளது. அதன் புதிய விலை 329 ரூபாவாகும்.சுப்பர் டீசல் 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 434 ரூபாவாகும்.

# பாராளுமன்றத்துக்குச் செல்ல ஒரு மாத தடை



இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார, சுஜித் சஞ்சய ஆகிய பாராளுமன்ற செயற்பாடுகளில் இருந்து ஒரு மாதகாலத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஒக்ரோபர் 20ஆம் திகதி அன்று பாராளுமன்ற நூலக வளாகத்தில் மூவரும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், அவர்கள் பாராளுமன்ற செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

சமல் ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட பாராளுமன்ற சிறப்புரிமைகள் குழுவின் அறிக்கையிலேயே இந்த இடைநிறுத்த உத்தரவு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது..

# நீதிமன்றங்களில் உள்ள சாட்சி கூண்டுகள் அகற்றப்படும்

நீதிமன்றங்களில் உள்ள சாட்சி கூண்டுகள் முழுமையாக அகற்றப்படும் என நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ நேற்று (30) தெரிவித்தார்.

“நீதிமன்றம் என்பது பயத்துடனும் சந்தேகத்துடனும் செல்லும் இடமல்ல. நீதிமன்றத்தின் முன் சாட்சியமளிக்கும் அனைவரும் குற்றவாளிகள் அல்ல.

சாட்சிகள் நீதித்துறை செயல்பாட்டில் உதவும் குடிமக்கள்.

எனவே கூண்டிலிருந்து சாட்சியமளிக்கும் ‘கூண்டு முறை’ மாற்றப்பட்டு, கண்ணியமான முறையில் சாட்சியம் அளிக்கும் முறை இந்த ஆண்டு இறுதிக்குள் தொடங்கப்படும்..” என நீதியமைச்சர் தெரிவித்தார்.

# புதிய களனி பாலம் தற்காலிகமாக மூடப்படும்

புதிய களனி பாலம் அத்தியாவசிய பராமரிப்பு பணிகள் காரணமாக நாளை (டிசம்பர் 01) முதல் 3 கட்டங்களாக போக்குவரத்துக்காக மூடப்படும் என அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மூன்று கட்டங்கள் பின்வருமாறு

கட்டம் 01 - டிசம்பர் 01 (வெள்ளிக்கிழமை) இரவு 9.00 மணி முதல் டிசம்பர் 04 (திங்கட்கிழமை) காலை 6.00 மணி வரை.

கட்டம் 02 - டிசம்பர் 08 (வெள்ளிக்கிழமை) இரவு 9.00 மணி முதல் டிசம்பர் 11 (திங்கட்கிழமை) காலை 6.00 மணி வரை.

கட்டம் 02 - டிசம்பர் 15 (வெள்ளிக்கிழமை) இரவு 9.00 மணி முதல் டிசம்பர் 18 (திங்கட்கிழமை) காலை 6.00 மணி வரை.

போக்குவரத்து நெரிசலை தவிர்க்க மாற்று வழிகளை பயன்படுத்துமாறு நெடுஞ்சாலைகள் அமைச்சு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# இந்தியத்தேர்தலால் ஐ.பி.எல் திகதி அறிவிப்பதில் தாமதம்

பாராளுமன்ற தேர்தல்கள் காரணமாக 2024 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் தொடரின் முழு அல்லது பாதி போட்டிகள் இந்தியாவுக்கு வெளியே நடத்தப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது, 2024 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில்ஐ.பி.எல் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.பாராளுமன்ற தேர்தல் 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ளது. இதனால் ஐ.பி.எல் அட்டவணை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையம் பொதுத் தேர்தல் திகதியை அறிவித்த பிறகு ஐ.பி.எல் அட்டவணை வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தல் திகதியை இந்தியத் தேர்தல் ஆணையம் முடிவு செய்யும்போது மட்டுமே, 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல் போட்டியின் அட்டவணையை ஐ.பி.எல் நிர்வாகக் குழு அறிவிக்கும் என்று 'பிடிஐ' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற தேர்தல்கள் காரணமாக, 2024 ஐ.பி.எல் போட்டியின் முழு அல்லது பாதியும் இந்தியாவுக்கு வெளியே நடத்தப்படலாம் என்று பல வேறு ஊடக அறிக்கைகளில் கூறப்பட்டது. இந்தியாவில் ஐ.பி.எல் முழுமையாக நடைபெறுமா? இல்லையா? என்பது பொதுத் தேர்தல் திகதிக்குப் பிறகு தான் முடிவு செய்யப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி - மார்ச் மாதம் நடைபெறும் இந்தியா மற்றும் இங்கிலாந்து இடையேயான ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் முடிந்த பிறகு மார்ச் மூன்றாவது வாரம் முதல் மே மூன்றாவது வாரம் வரை ஐ.பி.எல் 2024 நடைபெற வாய்ப்புள்ளது. எதுவாக இருந்தாலும் பாராளுமன்ற தேர்தல் திகதி அறிவிப்புக்கு பின்னரே, ஐ.பி.எல் திகதி அறிவிக்கப்படும். மேலும், 20 அணிகள் கொண்ட ரி20 உலகக் கோப்பை 2024 ஜூன் 4-0 வரை நடைபெறவுள்ள நிலையில், ஐ.பி.எல் 2024 மார்ச் 22, 2024 இல் தொடங்கி மே 26, 2024 அன்று இறுதிப் போட்டியுடன் முடிவடையும், குறைந்தது ஒரு வாரமாவது வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (இது அதிகார பூர்வ தகவல் இல்லை)




டிசம்பர் 19 ஆம் திகதி துபாயில் நடைபெறும் ஏலத்தில் பல முன்னணி வீரர்களின் பெயர்களை ஏலத்தில் எடுக்க போட்டா போட்டி நடக்கும். சமீபத்தில், ஐ.பி.எல் அணிகள் தக்கவைத்த மற்றும் விடுவிக்கப்பட்ட வீரர்களின் இறுதிப்பட்டியலை வெளியிட்டது. இதில், ஆச்சரியமான விடயம் என்னவென்றால் அனைத்து அணிகளும் பல முக்கிய வீரர்களை வெளியிட்டு, இன்னும் பந்தயத்தில் வேகம் காட்ட இருக்கின்றன.

# விராட் கோலிக்கு கட்டம் கட்டிய பி.சி.சி.ஐ

தென்னாபிரிக்கா நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி மூன்று வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் பங்கேற்று விளையாட இருக்கிறது. இந்த சுற்றுப் பயணத்திற்கான மூன்று வகையான இந்திய அணிகளும் அறிவிக்கப்பட்ட வேளையில் விராட் கோலி மற்றும் ரோஹித் சர்மா ஆகியோர் டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் மட்டுமே இடம்பிடித்துள்ளனர்.

ஒருநாள், ரி20 போட்டிகளுக்கான அணியில் அவர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த சுற்றுப்பயணத்திற்கு முன்னதாக இந்திய அணியின் கப்டன் ரோஹித் சர்மாவுடன் நடைபெற்ற மீட்டிங் ஒன்றில் விராட் கோலியின் எதிர்காலம் குறித்து இந்திய கிரிக்கெட் நிர்வாகமான பி.சி.சி.ஐ சில முக்கிய முடிவுகளை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது. அந்த வகையில் ரோஹித் சர்மாவுடன் நடைபெற்ற அந்த மீட்டிங்கில் இளம் வீரர்கள் அணிக்குள் வந்துள்ளதால் ரி20 கிரிக்கெட்டில் விராட் கோலியின் இடத்தை இனி வழங்க முடியாது என்றும் அவருடைய இடத்தில் இளம் வீரர்களே தொடர்ந்து விளையாடுவார்கள் என்றும் இது குறித்து நீங்களே விராட் கோலியிடம் தெரிவித்து விடுங்கள் என பி.சி.சி.ஐ யின் முக்கிய நிர்வாகிகள் ரோஹித் சர்மாவிடம் கேட்டுக் கொண்டதாக தெரிகிறது.



ஹர்திக் பாண்டியா தற்போது காயத்தினால் அவதிப்பட்டு வருவதால் அடுத்த ஆண்டு ரி20 உலகக் கோப்பை வரை ரி20 அணியின் கேப்டனாகவும் ரோஹித் சர்மா தொடர வேண்டும் என கேட்டுக் கொண்டதாகவும் அதற்கு ரோஹித் சர்மாவும் சம்மதம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ரி20 உலகக் கோப்பையில் ரோஹித் சர்மா அணியின் கப்டனாக விளையாடும் பட்சத்தில் விராட் கோலிக்கு மட்டும் இடம் கிடைக்காது என்று கூறப்படுகிறது.

விராட் கோலியே முன் வந்து ரி20 கிரிக்கெட்டில் ஓய்வை அறிவிக்க வேண்டும் என்று பி.சி.சி.ஐ எதிர்பார்ப்பதாக தெரிகிறது.

இந்திய அணிக்காக கடந்த பல ஆண்டுகளாக முக்கிய வீரராக இடம் பிடித்து விளையாடி வரும் விராட் கோலிக்கு இடம் ஒதுக்காமல்இருப்பது சரியானதாக இருக்காது என்றும் அதனைப் புரிந்து கொண்டு அவரே சில முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் பி.சி.சி.ஐ எதிர்பார்ப்பது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 01.12.2023 அன்று வெளியிடப்பட்டது.